**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.414/2021** **தேதி.**09.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 09.03.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.வடிவேல் |
| த/பெ. | திரு.கிருஷ்ணன் |
| வயது | 37/2026 |

துவக்க நேரம் 04.10 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் ஆமாம். என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு அழைத்துவந்தது யார் என்றால் மதன் என்னை அழைத்துவந்தார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் மதன் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது, சாட்சி மீண்டும் நானும், மதனும் சொல்லி தட்டச்சு செய்ததாக கூறினார்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள தகவல்கள் எந்த தேதியில் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதிகளை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 12, 13 வருடங்களாக தெரியும்.

3. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விலாசத்தில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 15 ஆண்டுகாளக வசித்து வருகிறேன். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளது என்றால் விஜயன் தாக்கல் செய்துள்ளார். முதல் பிரதிவாதியின் மனைவியின் பெயர் என்னவென்றால் குட்டியம்மாள்.

4. முதல் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் தேங்காய் கடை வைத்துள்ளார், அந்த கடையில் நான் வேலை செய்கிறேன். தேங்காய் கடையில் எனக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.7,000/– ஆகும்.நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், வாதி எப்பொழுது, எந்த மாத, வருடத்தில் எவ்வளவு தொகை சீட்டுக்காக கட்டினார் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் தேதி, மாத, வருடம் தெரியாது, தொகை மட்டும் தெரியும்.

5. பிரதிவாதிகள், வாதியிடம் ரூ.2,00,000/– சீட்டு கட்டியதாக நான் முதன்மை சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளநிலையில் மேற்படி சீட்டை எடுத்தார்களா, இல்லை எடுக்கவில்லையா, எந்த தேதியில், எந்த மாத சீட்டை எடுத்தார்கள், இருதரப்பினருக்குமிடையே இருந்த பண பரிமாற்றம் என்ன என்பதை குறிப்பிட்டு நான், என்னுடைய முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, மீதி தொகையாக ரூ.1,00,000/– சீட்டுத்தொகை கட்டவேண்டியிருந்தது, அது மட்டும் தெரியும்.

6. மேற்படி சீட்டு தொடர்பான தகவல்கள் எல்லாம் வாதி, பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியபிறகுதான் எனக்கு தெரியவந்தது என்றால் ஆமாம். அந்த சட்ட அறிவிப்பை நான் படித்துபார்த்தேனா என்றால் நானும், அவரும்தான் சேர்ந்து பார்த்தோம். அந்த சட்ட அறிவிப்பிற்கு, எனது உரிமையாளர் பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை.

7. மேற்படி தகவல்கள், எந்த தேதியில் எனக்கு தெரியும் என்றால் கடந்த 13.09.2021 அன்று தெரியும். கடந்த 13.09.2021க்கு முன்பு வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே நடந்த பணபரிமாற்றங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான், வாதியிடம் சீட்டு ஏதேனும் கட்டியுள்ளேனா என்றால் இல்லை. வாதி, சீட்டு நடத்தினார்

என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. பிரதிவாதிகள், ரூ.1,00,000/– கட்டவேண்டியதாக நான் சொல்லியுள்ளநிலையில், ரூ.60,000/– என்ன கணக்கு என்று நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் வட்டிக்காக பொதுவாக கட்டுவார்கள். ரூ.1,00,000/– எத்தனை ஆண்டுகளாக கட்டவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது தெரியாது, ஆனால் ரூ.1,00,000/–க்கு, ரூ.1,60,000/– கொடுப்பதாக பேசப்பட்டது.

9. நான், பிரதிவாதிகளுக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில், ரூ.7,000/– கொடுக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளநிலையில் எந்த தேதியில் கொடுக்கபப்பட்டது என்றால் கடந்த 17.09.2021 அன்று கொடுக்கப்பட்டது, மொத்தம் ரூ.1,60,000/– பேசப்பட்டது, அதில் ரூ.7000/– கொடுத்ததுபோக மீதி ரூ.1,53,000/– ஒரு துண்டு சீட்டில் எழுதிகொடுக்கப்பட்டது, அந்த துண்டு சீட்டு யார் எழுதினார் என்றால் வாதி விஜயன் எழுதினார். அந்த சீட்டில் நான் அல்லது வேறுயாரேனும் கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை.

10. அந்த சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரா என்ற விவரத்தை, எனது உரிமையாளர் எனக்கு சொன்னாரா என்றால் அதுபற்றி சொல்லவில்லை. மேற்படி கடன்தொகை குறித்து நானோ, எனது உரிமையாளரோ காவல் துறை மூலம் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அதுபற்றி என்னிடம் எனது உரிமையாளர் கூறவில்லை.

11. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நிரூபிக்கும்விதமாக நான், எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய சாட்சியத்தை இவ்வழக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றாலும் சரியல்ல.

12. பிரதிவாதிகள், வாதியிடம் கடன் பெற்றார்கள் என்றாலும் அதற்காக அவர்கள் ஒரு பிரமிசரி நோட் எழுதிக்கொடுத்தார்கள் என்றாலும் ஆனால் மேற்கண்ட வழக்கின் சங்கதிகள் நேரடியாக தெரியாமலும், நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 4.45 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.